## கரூர் நகராட்சியில் 2019ம் வருடம் மார்ச் மாதம் 08 ம்தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

**1) 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1 (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**: ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்

5 (v) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்

   a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   e) 2000-ம் அதற்கு மேல்.

2. வணிக வளாகங்கள்:
   a) பெரிய மற்றும சிறிய துணிக்கடைகள்,
   b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,
   c) திரையரங்குகள்,
   d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்,
   e) கல்வி நிறுவன வளாகங்கள்,
   f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்,
   g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,
   h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்,

3 மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

4 சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

II தண்டனைகள் விபரம்

பிரிவு 306 (28-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும பகிர்ந்தளித்தல் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய் |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (1989/2019/எச்1)

**தீர்மான எண்.1509 அனுமதிக்கப்பட்டது.**

**2)**கரூர் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு மற்றும் பாராளுமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க **2018–2019**ல் இருப்பு குறைவாக இருப்பதால் உத்தேசமாக ரூ.**5.00**லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (பி7/3005/2018)

தீர்மான எண்.1510 அனுமதிக்கப்பட்டது.

**3)** கரூர் நகராட்சி பொறியியர் பிரிவு ஈப்பு எண்.TN47 S0070க்கு BREAK மற்றும் SUSPENSON SYSTEMல் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்ய நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலின் அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி **1920** பிரிவு **15**ன் கீழ் ஆனையர் அவர்களிடம் **01.03.2019** அன்று அனுமதி பெற்று MAHENDRA AND MAHENDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலரிடமிருந்து விலைப்புள்ளி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி கரூர் நகராட்சி பொறியியர் பிரிவு ஈப்பு எண்.TN47 S0070க்கு BREAK மற்றும் SUSPENSON SYSTEMல் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்ய MAHENDRA AND MAHENDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/S.SHIVA AUTO MOBILES PVT. LTD ரூ.**97269**க்கு மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி ரூ.**97269**ஐ குடிநீர் நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)பொறியியர் பிரிவு ஈப்பு எண்.TN47 S0070க்கு BREAK மற்றும் SUSPENSON SYSTEMல் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்ய MAHENDRA AND MAHENDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/S.SHIVA AUTO MOBILES PVT. LTD வரப்பெற்ற மதிப்பீடு பட்டியல் ரூ.97269ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் குடிநீர் நிதியில் பட்டியல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2)நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டும், நகரமைப்பு அலுவலர் அவர்கள் பயன்படுத்தும் இவ்வாகனத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆனையர் அவர்களிடம் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/12569/2018)

தீர்மான எண்.1511 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சியில் கரூர் இரயில்வே சந்திப்பு முதல் தேசிய நெடுஞ்சாலை NH வரை நீளம் 2600 மீட்டர் மதிப்பீடு ரூ. 18.00 கோடிக்கு இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு பூமிபூஜை விழாவிற்கு பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்தப்பட்டது. இவ்விளம்பரம் தினமலர் நாளிதழில் விவிம்பரப்படுத்தப்பட்டது. இந்நிறுவனத்தினர் பில்பட்டியல் தொகை ரூ.49,376/—யை M/S.Raji Communication என்ற பெயருக்கு வழங்க கோரியுள்ளார். எனவே மேற்படி தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினம் ரூ.49,376/—யை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் M/s.Raji Communication-க்கு தொகை ரூ.49,376/யை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2020/2019)

தீர்மான எண்.1512 அனுமதிக்கப்பட்டது.

5) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்ட விதிகள் – 2019னை, அரசாணை நிலை எண்.18,, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (MA1) நாள்.04.02.2019—ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள்.04.02.2019—ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எப்1/2339/2019)

தீர்மான எண்.1513 பதிவு செய்யப்பட்டது.

6)கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி வரும் கட்டிட விண்ணப்பங்களுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.68, நாள்.29.12.2011ன்படி மூன்றாண்டுகளுக்கு உரிமையாணை கட்டணம் வசூல் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டும் வருகிறது. தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019னை அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ1), நாள்.04.02.2019ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி – ஐஐஐ பிரிவு 1 (ய), நாள்.04.02.2019  ல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள 2019, பிரிவு 14—ன்படி திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அனுமதிக்காலத்தினை 5 ஆண்டுகளுக்கு வழங்கவும், ஒரு முறை காலநீட்டிப்பு காலத்தினை 3 ஆண்டுகளுக்கு வழங்கவும், புதிய கால அவகாசத்திற்கேற்ப உரிமையாணை கட்டணங்களின் விகிதத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் கண்டவாறு திருத்திய கட்டண விகிதங்களின்படி வரும் 01.04.2019 முதல் வசூலிக்கவும், மேற்படி திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விபரத்தினை தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஏற்படும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
1) திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதிக்காலம் 5 ஆண்டுகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் 01.04.2019 முதல் திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களின்படி கட்டணங்கள்

வசூலிக்கும்பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

2)புதியதாக திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விபரங்களை தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். (எப்1/2339/2019)

## கட்டண விபரம்

| வ.எண். | சட்டப்பிரிவு | இன்ன காரியத்திற்காக | அளவு | அனுமதி காலம் | புதிய கட்டண விகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 6 | 7 | 8 |
| 1 | 197A | விண்ணப்ப கூர்ந்தாய்வு கட்டணம் | விண்ணப்பம் ஒன்றுக்கு | ஒருமுறை மட்டும் | 500 | |
| 2 | 197A | கட்டிடம் கட்டும் மனையிடங்கள் அங்கீகரிக்க | 220.0.ச.மீ. வரை | ஒருமுறை மட்டும் | 200 | |
| 3 | 197A | கட்டிடம் கட்டும் மனையிடங்கள் அங்கீகரிக்க | 220.0 ச.மீ பரப்பளவிற்கு மேல் ஒவ்வொரு 100.0 ச.மீட்டருக்கு | ஒருமுறை மட்டும் | 200 | |
| 4 | 175 முதல் 178 வரை | மனை பிரிவு அங்கீகரிக்க | ஏக்கர் ஒன்றுக்கு | ஒருமுறை மட்டும் | 7500 | |
| 5 | 197(1) (b) & 215 | குடியிருப்பு மற்றும் பள்ளி உபயோகத்திற்கு ஆர்.சி.சி.கட்டிடடம் தரைகீழ்த்தளம் மற்றும் தரைத்தளம் | 10 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகள் | 200 | |
| 6 | 197 (1) (B) 215 | குடியிருப்பு மற்றும் பள்ளி உபயோகத்திற்கு ஆர்.சி.சி.கட்டிடடம் முதல் தளம் | 10 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகள் | 300 | |
| 7 | 197 (1) (b) & 215 | குடியிருப்பு மற்றும் பள்ளி உபயோகத்திற்கு ஆர்.சி.சி.கட்டிடடம் இரண்டாவது தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | 10 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகள் | 400 | மேற்படி கட்டிடங்களில் சுற்றுச்சுவர், கழிவறை, சுற்றுச்சுவர் முதலானவை உட்பட ஆர்.சிசி.கூரை கட்டிடம் |
| 8 | 197(1) (b) & 215 | வணிகம் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு ஆர்.சி.சி.கட்டிடடம் தரைகீழ்த்தளம் மற்றும் தரைத்தளம் | 10 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகள் | 300 | |
| 9 | 197 (1) (B) 215 | வணிகம் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு முதல் தளம் | 10 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகள் | 450 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 197 (1) (b) & 215 | வணிகம் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு ஆர்.சி.சி.கட்டிடடம் இரண்டாவது தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | 10 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகள் | 600 | மேற்படி கட்டிடங்களில் சுற்றுச்சுவர், கழிவறை, சுற்றுச்சுவர் முதலானவை உட்பட ஆர்.சிசி.கூரை கட்டிடம் |
| 11 | 197 (1) (b) & 215 | ஓட்டுக் கூரை, தகரக்கூரை, லைட் ரூம் போன்றவை | 10 Sq.M | ஐந்து ஆண்டுகள் | 150 | |
| 12 | 197 (1) (b) & 215 | கட்டிட மராமத்து பணிகள் (கட்டிடத்தில் எவ்வித மாறுதலுமின்றி) | 50 ச.மீ. கூரையிலான கட்டிடம் அதன் பாகத்திற்கு | ஒரு மாதம் | 2000 | |
| 13 | 197 | பழைய கட்டிடங்களை இடித்து அகற்றிக்கொள்ள அனுமதி கட்டணம் | 1.0 ச.மீ | – | 50 | நகராட்சியால் இடிபாடுகளை அள்ள |
| 14 | 183 | கட்டிட சாமான்கள் மற்றும் கட்டுமான பொருட்களை போக்குவரத்து இடையூறு இன்றி சேமித்து அகற்றிக்கொள்ள | உத்தேச கட்டுமானத்தின் 10.0 ச.மீ.க்கு | எந்தவொரு நேரத்திலும் 3 தினங்களுக்கும் அகற்றப்பட வேண்டும் | 300 | – |
| 15 | 182 | நகராட்சி சாலைகள், பொது இடங்களில் தற்காலிக பந்தல் அமைத்துக்கொள்ள | 10 ச.மீ.அதன் பாகத்திற்கு | ஒரு மாதத்திற்கும் அதற்கும் குறைந்ததற்கும் | 400 | – |
| 16 | | அனுமதியின்றி துவக்கப்பட்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி கட்டணத்தில் 100% கூடுதல் | | | | |
| 17 | 204 | கட்டிட அனுமதி புதுப்பித்தல் கட்டணம் | ஏற்கனவே செலுத்திய தொகை | மூன்று ஆண்டுகள் | | – |
| 18 | | காலம் தாழ்த்தி பெறப்படும் கால நீடிப்பு கோரும் விண்ணப்பங்களுக்கு | ஏற்கனவே செலுத்திய தொகை | மூன்று ஆண்டுகள் | | – |
| 19 | 207 | கூடுதல் வரைபட நகல் வழங்கிட | நகல் ஒன்றுக்கு | – | 200 | – |
| | | முழுமை திட்ட பட்டியல் நகல் வழங்க | நகல் ஒன்றுக்கு | – | 5000 | – |
| | | திட்ட வரைபட நகல் வழங்க | நகல் ஒன்றுக்கு | – | 2000 | – |
| | | மனைப்பிரிவு வரைபட நகல் வழங்க | நகல் ஒன்றுக்கு | – | 2000 | – |
| | | நகர வரைபட நகல் வழங்க | நகல் ஒன்றுக்கு | – | 500 | – |
| | | நகர நில அளவை வரைபடம் உண்மை நகல் வழங்கிட | புல எண் ஒன்றுக்கு | – | 250 | – |
| | | நகரளவை "அ" பதிவேடு நகல் வழங்கிட | புல எண் ஒன்றுக்கு | – | 250 | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | 285C | நகராட்சி சாலைகள், பொது இடங்களில் மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் விளம்பரப்பலகை வைக்க இட வாடகை | 3 ச.மீ அதன் பாகத்திற்கும் பேருந்து நிலையம் | ஆண்டு ஒன்றுக்கு | 3000 | – |
| | | | இதர பகுதிகள் | ஆண்டு ஒன்றுக்கு | 1500 | – |
| | | | மின் கம்பங்களில் 0.75 x 0.45 m அளவில் | ஆண்டு ஒன்றுக்கு | 750 | – |
| 21 | 197, 198, 199, 217 | தனியார் – நகராட்சி இடங்களில் சர்க்கஸ் பொருட்காட்சி போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்காக அமைக்கப்படும் தற்காலிக தகர செட் துணிப்பந்தல் போன்ற அமைப்புகளுக்கு | 10 ச.மீ.அதன் பாகத்திற்கு | முப்பது நாட்கள் அதன் பாகத்திற்கு | 100 | – |
| 22 | 208, 217 | பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளல்லாத குடிசை கட்டுதல் சட்டப்பிரிவு 217 (2)ன்படி தற்காலிக கூரைசெட், பந்தல் தனியார் இடங்களில் அமைக்க அனுமதி கட்டணம் | 10 ச.மீ.அதன் பாகத்திற்கு | மூன்று மாதங்கள் | 300 | – |
| 23 | 321 | கட்டிட வரைபட வரைவாளர் | | | | |
| | | அ) உரிம கட்டணம் | ஒரு நபருக்கு | ஆண்டு ஒன்றுக்கு | 3000 | உரிமம் முடியும்முன் செலுத்தத் தவறினால் 100 அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும் |
| | | ஆ) வைப்புத்தொகை | – | ஒரு தடவை | 5000 | உரிமம் முடியும்முன் செலுத்தத் தவறினால் 100 அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும் |
| | | இ) உரிமம் புதுப்பித்தல் | – | ஆண்டு ஒன்றுக்கு | 2000 | உரிமம் முடியும்முன் செலுத்தத் தவறினால் 100 அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும் |
| 24 | 197, 215A | மழை நீர் சேமிப்பு தொட்டி அமைத்து பராமரித்தல் வைப்புத்தொகை | சாதாரண குடியிருப்பு சமயலறை ஒன்றுக்கு | வைப்புத் தொகை | 3000 | – |
| | | | வணிக வளாகம் | வைப்புத் தொகை | 4000 | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அடுக்கு மாடி குடியிருப்பு மற்றும் சிறப்பு கட்டிடங்கள் | வைப்புத் தொகை | 25000 | – |
| 25 | 250 | மின்சக்தியினால் அல்லது ஆயில் இன்ஜின் இவற்றால் இயக்கப்படும் இயந்திரங்களை நிருவிக்கொள்ள | 5 குதிரை சக்தி வரை | ஐந்து ஆண்டுகள் | 4000 | – |
| | | | 5 – 10 குதிரை சக்தி வரை | ஐந்து ஆண்டுகள் | 6000 | |
| | | | 11 – 50 குதிரை சக்தி வரை | ஐந்து ஆண்டுகள் | 10000 | |
| | | | 51 குதிரை சக்திக்கு மேல் | ஐந்து ஆண்டுகள் | 30000 | – |

தீர்மான எண்.1514 அனுமதிக்கப்பட்டது.

7) கரூர் நகராட்சிக்குட்பட்ட தாலுக்கா அலுவலகம் முன்புறம் மணிக்கூண்டு, காந்திகிராமம் தெரசா பள்ளி அருகில் பயணிகள் நிழல்குடை, கச்சேரி பிள்ளையார் கோவில் பின்புறம் வாசவி மஹால் அருகில் மணிக்கூண்டு அமைக்க கரூர் ரோட்டரி சங்கம் தலைவர் அனுமதி வழங்கக் கோரி 02.03.2019ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி நிழல்குடை மற்றும் மணிக்கூண்டு அமைக்க கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1)நிழற்குடை மற்றும் மணிகூண்டு அமைப்பதற்கு உரிய வரைபடங்கள் நகராட்சி பொறியாளர் அவர்களிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2)பணிகள் முடிந்த பின் பிற்காலத்தில் தாங்களால் உருவாக்கப்பட்ட சொத்திற்கு எவ்வித உரிமையும் கோரக்கூடாது மற்றும் பணி மேற்கொண்டதற்கான தொகை கேட்டு தங்கள் சங்கம் மூலம் எவ்வித கடித போக்குவரத்தும் வைத்துக் கொள்ளக்கூடாது.
3)தங்களது பணியில் தரம் மற்றும் திருப்தி இல்லையெனில் எவ்வித முன்னறிவிப்பின்றி தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படும்.
4)தங்களது சங்கத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்போது எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் சிறப்பாக பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5)தங்களது சங்கத்தின் மூலம் பயணியர் நிழற்குடை மற்றும் மணிக்கூண்டு கட்டுமான பணி முடிவுற்றதும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6)தங்களது சங்கத்தின் மூலம் கட்டப்படும் பயணியர் நிழற்குடை மற்றும் மணிக்கூண்டு கட்டடத்தில் வியாபார ரீதியான விளம்பரங்கள் ஏதும் எழுதக்கூடாது. தங்களது சங்க சுலோகத்தினை மட்டும் எழுதி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
7)தாங்கள் பணி மேற்கொள்ளும்போது பொதுமக்களுக்கோ, சாலை போக்குவரத்திற்கோ இடையூறின்றி சாலை பாதுகாப்பு முறைகளை பின்பற்றி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
8)நிர்வாக நலன் கருதியும், எதிர்காலத்தில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களால் கொண்டு வரப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் தங்களுக்கு வழங்கிய அனுமதியுடன் சேர்த்து கட்டுப்படுத்தும்.
9)தங்கள் சங்கத்தின் மூலம் பணிகள் மேற்கொண்டு இரண்டு மாத காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு கரூர் ரோட்டரி சங்கத்திற்கு பயணியர் நிழற்குடை, மணிகூண்டு அமைப்பதற்கான கட்டுமான பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ13260/19)
தீர்மான எண்.1515 அனுமதிக்கப்படுகிறது.

8)கரூர் நகராட்சி வார்டு எண்.33 முதல் வார்டு எண்.36 வரையுள்ள சணப்பிரட்டி பகுதிகளில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள மின்மோட்டார்களை மாற்றி அதற்கு தேவையான உதிரி பொருட்கள் மற்றும் புதிய மின்மோட்டார்கள் பொருத்தும் பணியினை **ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய

அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/S.PRG Construction, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.420873/-இலட்சத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | PRG Construction, Karur | 0.08% குறைவு |
| 2) | RPS Construction,Karur | 1.61% அதிகம் |
| 3) | Pipes and cables, Karur | 2.60% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/2331/19)

தீர்மான எண்.1516 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் பாலம்பாள்புரம் கழிவு நீரேற்று நிலையம் மற்றும் அரசுகாலனியில் கழிவு நீரேற்று நிலையத்தில் ஆட்டோ மெடிக் பவர் பேக்டர் கன்ட்ரோல் பேனல் - புதிதாக சப்ளை செய்யும் பணியினை **ரூ.7.95 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள HI-TECH Engineering, Dindigul அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.7.95இலட்சத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | HI-TECH Engineering, Dindigul | 0.02% குறைவு |
| 2) | Kannappa Electronicals, Trichy | 1.42% அதிகம் |
| 3) | Ideal Electronics, Coimbatore | 3.45% அதிகம் |
| 4) | Sri.Kathir Enterprises, Madurai | 6.50% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/1830/19)

தீர்மான எண்.1517 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.